JobAccess
Driving disability employment

# தகவல் ஏடு
# வேலை தரும் பணியமர்த்துனர்களுக்கான பணியிட அணுகல் குறித்த சரிபார்ப்பு அட்டவணை

உங்களது நிறுவனத்தினது பணியிடத்தின் வளைந்துகொடுக்கும் தன்மை மற்றும் அவ்விடத்தை அணுகும் வசதி ஆகியவற்றை நீங்கள் எவ்வாறு மேம்படுத்த இயலும் என்பதைப் பற்றிய யோசனைகளுக்கு இந்த சரிபார்ப்பு அட்டவணையைப் பாவியுங்கள்.

ஒரு துவக்கமாக, கீழ்வரும் கொள்கைகள் அல்லது திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை நீங்கள் கருத்தில் கொள்ளலாம்:

- ❒ சரிசம வேலைவாய்ப்பு மற்றும் அல்லது பலவகைப்பட்டோரை உள்ளடக்கும் திட்டம்
- ❒ நியாயமான மாற்றியமைப்புகள் / வளைந்துகொடுக்கும் தன்மையுள்ள பணியிட ஏற்பாடுகள்
- ❒ அணுகல் வசதி குறித்த செயல் திட்டம்
- ❒ பல்வகைமை மற்றும் தகவல் வெளிப்படுத்துகை
- ❒ வேலைக்குத் திரும்பல் குறித்த கொள்கை
- ❒ உடலியலாமை குறித்த விழிப்புணர்வுப் பயிற்சித் திட்டங்கள்
- ❒ உடலியலாமை பரிவுதவி நிறைவேற்றுநர்கள்
- ❒ உடலியலாமை அறிவுரை-வழிகாட்டல்
- ❒ உடலியலாமையுடைய பணியாளர்களுக்கான தொடர்பு-வலைகள்

அணுகுவதற்கு அதி எளிதான பணியிடமாகவும், உடலியலாமை உள்ளோர் தெரிவு செய்யும் பணியமர்த்துனராகவும் உங்களது நிறுவனத்தினை மாற்றியமைக்க உதவக் கூடிய கீழ்வரும் யோசனைகளையும் நீங்கள் கருத்தில் கொள்ளலாம்;

- ❒ காலியிட விளம்பரங்களும், பணிநிலை விவரிப்புகளும் உங்களது நிறுவனத்தினால் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றன – உடலியலாமை உள்ளவர்கள் வேலைக்கு விண்ணப்பிப்பதை உங்களது நிறுவனம் வரவேற்கிறதா, மற்றும் விளம்பரங்களை இணையம் மற்றும் அச்சு ஊடக வாயிலாக (ப்ரெயில் அல்லது பெரிய எழுத்திலான அச்சு) அடைய இயலுமா என்பது.

- ❒ உடலியலாமை உள்ளோருக்கான அமைப்புகள் அல்லது உடலியலாமை உள்ளோருக்கான வேலைவாய்ப்பு சேவை வழங்குநர்கள் ஆகியோருக்கு காலி இடங்களைப் பகிர்ந்து கொடுப்பதன் மூலம் உங்களது அமைப்புகளுடைய விண்ணப்பதாரிகளுக்கான தேடலை விரிவுபடுத்துதல்.

- ❒ உடலியலாமை உள்ளவர்களது அறிவு மற்றும் திறன்களை அதிகரிக்கவும், அவர்கள் நீடித்த வேலைவாய்ப்பினைப் பெறவும் உதவும் வகையில் உடலியலாமை உள்ளவர்களுக்கு வேலை அனுபவம் அல்லது வேலைக்கான பயிற்சிகளை அளித்தல்.

Australian Government

JobAccess is the national hub for workplace and employment information for people with disability, employers and service providers.

**1800 464 800** **www.jobaccess.gov.au**

- ❒ நேர்காணல் நடைபெறும் இடத்திற்கு வந்து சேருதல், உதவியாளர் அல்லது ஆதரித்துப் பேசுபவர் ஒருவரைப் பெறுதல் அல்லது 'ஆஸ்லன்' மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை ஏற்பாடு செய்தல் போன்ற காரியங்களுக்காகத் தேவைப்படும் மாற்றியமைப்புகளைச் செய்து கொள்ள வசதியாக நேர்காணல்கள் நடக்கும் முறையை மாற்றுதல்.

- ❒ உடலியலாமை உள்ளோர் உள்ளடக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் நேர்காணலுக்கான கேள்விகள் மற்றும் மதிப்பீட்டுக் காரியங்களின் பாங்கு, தன்மை மற்றும் நுட்பத்தினை மீள்பரிசீலனை செய்தல்.

- ❒ உடலியலாமை உள்ள ஒருவருக்கு வேலை ஒன்று தரப்பட்டதும், நியாயமான மாற்றியமைப்புகள் ஏதும் தேவைப்பட்டால் அதைப் பற்றிக் கலந்துரையாட வேண்டும் என்பதைத் தரப்படுத்தப்பட்ட செயல்முறையாக்குதல்.

- ❒ மொழிபெயர்ப்பு உபதலைப்புகள் உள்ள காணொளிகள், சாதாரணமான ஆங்கில உரைகள், கணினித் திரையைப் பார்த்து வாசிப்பதற்கு ஏதுவான இதர ஒத்தாசைத் தொழில்நுட்பங்களைக் கொண்ட உள்ளகக் கணினி முறைமைகள் போன்ற அணுகுவதற்கு வசதியான பயிற்சிப் பொருட்களைக் கொடுத்தல்.

- ❒ பணியிட மாற்றியமைப்புகள், உபகரணங்கள் அல்லது ஒத்தாசைத் தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து அவற்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

- ❒ உடலியலாமை உள்ளோருடைய தேவைகளைக் கவனத்தில் கொள்ளும் 'அவசரகால வெளியேற்றல்' (emergency evacuation) செயல்முறை ஒன்றை நடைமுறைப்படுத்துதல்.

- ❒ பின் வரும் விடயங்களைச் சோதியுங்கள்:

    - ○ உங்களுடைய வாகனத் தரிப்பிடம், உள்நுழைவு மற்றும் வரவேற்புப் பகுதிகள் ஆகியவை எளிதில் சென்றடையும் விதத்திலும், உடலியலாமை உள்ளோருக்கு ஆபத்து எதுவும் ஏற்படுத்தாத விதத்திலும் இருக்கிறதா,
    - ○ சக்கரநாற்காலி அல்லது நடைதாங்கி ஆகியவற்றைப் பாவிப்போருக்கு ஏற்ற வகையில் வழுக்காத, உறுதியான மற்றும் சமமான தரை விரிப்புகள் இருக்கின்றனவா,
    - ○ சக்கரநாற்காலிகளைப் பாவிப்போர் தடைகள் எதுவுமின்றி செல்லும் விதத்தில் சந்திப்பு அறைகளிலும், இடைவேளை வசதிகளிலும் போதுமான இடம் இருக்கிறதா, மற்றும்
    - ○ அனைத்துப் பயனர்களாலும் எளிதாகவும், யாருடைய உதவி இல்லாமலும் திறக்கப்படும் விதத்தில் கதவுகள் உள்ளனவா – அதாவது கதவுகள் பாரமாக இல்லாமலும், கைப்பிடிகள் எளிதாக எட்டும் உயரத்திலும் இருக்கின்றனவா என்றும் சோதியுங்கள்.

பணியிடத்தின் வளைந்து கொடுக்கும் தன்மை மற்றும் அவ்விடத்தை அணுகும் வசதி ஆகியவற்றை நீங்கள் மேம்படுத்துவதற்கு 'ஜாப்-அக்ஸெஸ்' (JobAccess) எனும் அமைப்பினால் உதவ இயலும். மேலதிகத் தகவல்களுக்கு www.jobaccess.gov.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது 'ஜாப்-அக்ஸெஸ்' அறிவுரைஞர் ஒருவரை 1800 464 800 எனும் இலக்கத்தில் அழையுங்கள் - கைப்பேசியில் இருந்து செய்யப்படும் அழைப்புகளுக்குக் கட்டணங்கள் அறவிடப்படும்.